**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**
**O.S.No. 166/2017**

**07.11.2023**

**வா.சா.1 ராமாமிர்தம் க/பெ.செல்லத்துரை அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பங்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் ஒரு பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் வேறு எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து அசேஷசம் மெயின்ரோட்டில் உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் நான்கெல்லையானது தெற்கு பக்கம் ஜெயலெட்சுமி, வடக்கு பக்கம் தங்கவேலு, கிழக்கு பக்கம் ஜெயலெட்சுமி, மேற்கு மெயின்ரோடு என்றால் சரிதான். தாவா சொத்தின் விஸ்தீரணம் மொத்தம் 52 குழி என்றால் சரிதான். குப்பம்மா என்பவர் எனது அம்மா. அவர் இறந்து 50 வருடம் ஆகிறது. கேட்கும்போதெல்லாம் 1ம் பிரதிவாதி சொத்து இல்லை என்று சொன்னதால் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த சொத்தானது எனது அம்மா பெயரில் தான் உள்ளது. எனது திருமணத்தின் போது எனது சகோதரர் சீர்வரிசை செய்து வைத்தாரா என்றால் இல்லை.

**(3ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)**

ஓம்.கே.சக்திவேல்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி